நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாட்டிற்
சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை

# ஈழநாட்டிலே தமிழ்ப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

## சில குறிப்புக்கள்

ஆ. சிவநேசச்செல்வன், பி. ஏ. [ஆனர்ஸ்]
தமிழ் விரிவுரையாளர்
பட்டதாரித் திணைக்களம்
யாழ்ப்பாணக் கல்லூரி

1974

வட்டுக்கோட்டை,
இலங்கை.

50/-

# ஈழநாட்டிலே
# தமிழ்ப் பத்திரிகைகளின்
# தோற்றமும் வளர்ச்சியும்

## சில குறிப்புக்கள்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்
19624

ஆ. சிவநேசச்செல்வன்

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

# ஈழநாட்டிலே தமிழ்ப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

## சில குறிப்புக்கள்

அன்னியர் ஆட்சியின் விளைவாலே தமிழில் ஏற்பட்ட பத்திரிகைத்துறை இன்று தொழில் ரீதியான நவீனப் பண்புகளுடன் இயங்குகின்றது. தமிழ் மொழி வளர்ச்சிக்கும் உரைநடை வளர்ச்சிக்கும் இயக்க விசையாக விளங்கும் பத்திரிகைகள், காலந்தோறும் தோன்றிப் பல்துறை வளர்ச்சிகளை நிலைநாட்டி வளர்ந்துள்ளன. சில் வாழ்நாளும் பல் பிணியும் கொண்டனவாகப் பல பத்திரிகைகள், நீண்டகாலந் தொடர்ந்து நடைபெறுவனவாக இல்லாவிட்டாலும் தொகுத்து நோக்கும்போது அவற்றினூடே வளர்ச்சிப் பாதையையும் சமுதாய வரலாற்றின் தடங்களையும் சுலபமாக வரையிட்டுக் காணலாம். அச்சியந்திரங்களின் வருகையோடும், வளர்ச்சியோடும் இணைந்து வளர்ந்த பத்திரிகையுலகு கிறித்துவப் பாதிரிமார்களின் முயற்சியோடு ஈழத்தில் ஆரம்பமாகியது.

சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்திலே அச்சுக் கூடங்கள் வைக்கும் உரிமை ஐரோப்பிய பாதிரிமாருக்கும் அரசாங்கத்துக்கும் மட்டுமேயிருந்தது. ஒல்லாந்தர் காலத்திலே இலங்கைக்கு அச்சியந்திரம் வந்ததாயினும் அது அரசாங்க அறிவித்தல்களையும் பிரகடனங்களையும் வெளியிட மட்டுமே பயன்படுத்தப்பட்டது.[1] 1821இல் யாழ்ப்பா

1. Diehl S Katharine. The Dutch Press in Ceylon. 1734 — 96. *The Library Quarterly* The University of Chicago, Vol 42, No 3, (1972) p. 329

வெளியிட்ட துண்டுப்பிரசுரங்கள் செய்தியறிவித்தல்கள் பற்றி மேற்படி கட்டுரை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். செய்தியறிவித்தல்கள் போன்றவை பத்திரிகைத் தோற்றத்திற்கு முன்னோடியானவை.

ணத்து நல்லூரிலே சர்ச் மிசன் சபையார் ஒரு அச்சியந்திரத்தை நிறுவினார்கள். 1870இல் இலங்கைக் கத்தோலிக்க சபையார் ஒரு அச்சுக்கூடத்தைக் கொழும்பில் அமைத்தார்கள். மூன்று வருடத்தின் பின்னரே இதனைக் கொழும்புக்குக் கொண்டு சென்றனர். ஈழத்தின் பத்திரிகைத் துறையை ஆரம்பித்துவைத்த அமெரிக்க மிசனரிமாரின் அச்சியந்திரசாலை 1832இல் தோன்றியது.[2]

சமயப் பிரசார ரீதியாகத் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு வந்த கிறித்தவப் பாதிரிமார்கள் பத்திரிகைகளை மையமாகக் கொண்டு பிரசாரம் செய்ய முயன்றனர். முதன் முதலாகத் தமிழிலே வார இதழ் திங்கள் இதழ்களாகப் பத்திரிகைகளை வெளியிட்டவர்கள் கிறித்தவப் பாதிரிமார்களேயாவர். பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னர் அச்சியநதிரங்களும் பத்திரிகை முயற்சிகளும் கீழைத் தேசத்திற்கு வரினும் தமிழ்ப் பத்திரிகைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன்னர் வெளிவந்ததாகத் தெரியவில்லை. ஆரம்பத்தில் ஐரோப்பியப் பாதிரிமார்களே அச்சுக்கூடங்களை வைத்திருந்தமையினால் கிறித்தவ மதப் பிரசாரமே பத்திரிகைகளின் முழு நோக்காக விளங்கியது.

இலங்கையின் முதலாவது தமிழிதழான 'உதயதாரகை' தோன்றியது 1841இல் ஆகும்.[3] மாசிகையாக ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர் திங்களிருமுறையாகி, வாரமொருமுறையாகித் தொடர்ந்து இன்றுவரை நடைபெற்று வரும் பத்திரிகையாக இது விளங்குகின்றது. ஹென்றி மாட்டின், செத்பேசன் (Hentry Martyn, Seth Payson) ஆகிய இருவரையும் ஆசிரியராகக் கொண்டு அமெரிக்க மிசன் அச்சியந்திரசாலையில் ஈஸ்ற்மன் ஸ்ராங் மைனர் (Eastman Strong minor) என்பவரால் இது வெளியிடப்பட்டது: 1843இல் மைனரின் அறிக்கைப்படி 800க்கு மேற்பட்ட வாசகர்கள் இருந்ததாக அறிகிறோம்.[4] இரு மொழிகளும் கலந்த நிலையில் வெளிவந்த இப்பத்திரிகையின் குறிக்கோள், அமைப்புப்

2. Kulendran S. Rt. Rev. Dr. *The Company of them publish* American Mission Press, Manipay. (1956) p. 8.

3. இதுவே இலங்கையில் தோன்றிய இரண்டாவது பத்திரிகையாகும். 1834ல் ஆரம்பித்த ஒப்சேவர் (ஆங்கிலம்) பத்திரிகையே முதலாவதாகும்.

4. Kulendran S. see. item 2 above p. 10.



பற்றிய விளக்கம் அவதானிக்கவேண்டியதொன்றாகும். அவ்விளக்கம் பின்வருமாறு இருந்தது:

“பத்திரிகை பற்றி அதன் குறிப்பு — உதயதாரகைப் பத்திரத்தில் கற்கை, சரித்திரம், பொதுவானகல்வி, பயிர்ச்செய்கை, அரசாட்சி மாற்றம் முதலானவை பற்றியும் பிரதான புதினச் செய்திகள் பற்றியும் அச்சடிக்கப்படும். அது தமிழ்ப் பாஷையிலும் இடைக்கிடையே தமிழும்—இங்கிலீசும் கூடினதாயும் எட்டுப் புறம் உள்ளதாக நான்காக மடித்த தாள் அளவில் ஒவ்வொரு மாதம் முதலாம் மூன்றாம் கிழமைகளிற் பிரசித்தம் பண்ணப்படும்”.[5]

சமயநோக்கிற் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு இயங்கினாலும் நோக்கும் அமைப்பும் பரந்த கோட்பாடுகளை உள்வாங்கியதாகக் காணப்படுகின்றது. தமிழ் நாட்டுப் பத்திரிகை உலகின் வழிவந்த அமைப்பே இதுவாகும்[6]. அமெரிக்க மிசனரிமாரின் தமிழ்க் கல்வி நோக்கும் ஈண்டு நினைவு கூரப்படவேண்டியதொன்றாகும். சமயவளர்ச்சி, பெண்கள், இளைஞர், தத்துவம், இலக்கியம் போன்ற பகுதிகளுக்கு அவை நிறைய இடமளித்துள்ளன. மக்களின் சிந்தனைகளைத் தம்பால் ஈர்ப்பதற்கும் தங்கள் கருத்துக்களை அவர்கள்பால் பரப்புவதற்கும் வாய்ப்பான ஊடகமாகப் பத்திரிகைகள் அமைய ஆரம்பித்தன. ஆரம்பகாலப் பத்திரிகைகள் யாவும் சமய சமூகஇலக்கியக் கோட்பாடுகளை மனங்கொண்டு செயலாற்றியுள்ளமை குறிப்பிடக்கூடியதொன்றாகும். மதமாறற ஆர்வத்தை வளர்க்கும் போக்கில் இயங்கிய உதயதாரகை கிறித்துவத்தையும் கல்வியையும் வளர்ப்பதில் அதிக கவனம் செலுத்தியது. சைவ சமயத்தின் குறைபாடுகளை வெளிக்கொணருவதும் கிறித்துவத்தின் மகிமையை விளக்குவதுமே இதன் நோக்கமாயினும் காலப் போக்கில் இலக்கிய இலக்கண சர்ச்சைகளுக்கு நல்ல களம் அமைத்துக் கொடுத்தது. பல்வேறு சம்பவங்களைப் பதிவு செய்துள்ள பதிவேடாகவும் விளங்குகின்றது. களத்தூர் வேதகிரி முதலியார், ஆறுமுக நாவலர், நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை போன்றோரின் சர்ச்சைகள் குறிப்பிடற்பாலன.

5. உதயதாரகை முதற்பிரதி (Thursday — Jan. 7, 1841)

6. பரமசிவானந்தம் அ. மு. பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை வளர்ச்சி (பக். 126.) தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை. (முதற் பதிப்பு 1966.)

உதயதாரகை ஆசிரியர்களுள் கரேல் விசுவநாத பிள்ளை, ஆணல்ட் சதாசிவம் பிள்ளை, பாவலர் துரையப்பா பிள்ளை ஆகியோரின் பணிகள் முக்கியமானவை. வெகுஜனப் பத்திரிகைத்துறை வளராத காலத்தில் இவர்கள் பணிகளும் பத்திரிகை நெறிகளும் சமூகத்திற் பரவலான சிந்தனைத் தாக்கத்தை ஏற்படுத்தின. இவர்கள் முயற்சிகளுக்கும் சிந்தனைகளுக்கும் உயிர் கொடுக்கும் தன்மையினதாகவும் முன்மாதிரியாகவும் இந்தியப் பத்திரிகைத்துறை விளங்கியதும் நோக்கத்தக்கது. அவர்கள் தமிழ் இலக்கியப் போக்கிலே பெருமளவு சிந்தனைத் தாக்கத்தையும் வேகத்தையும், ஊட்டும் இலக்கிய இலக்கண சர்ச்சைகளை நடாத்தினர். ஆணல்ட் சதாசிவம்பிள்ளை, பாவலர் துரையப்பாபிள்ளை போன்றோர் சமூகப்பிரச்சினைகளை நேர் நின்று நோக்கும் போக்கினைக் கொண்டிருந்தனர்.[7] சமய நோக்கில் இயங்கிய உதயதாரகையின் உன்னதமான காலம் இவர்களை ஆசிரியர்களாகக் கொண்ட காலமே. வெறும் சமய கீதங்களை உருப்போடாமல் தமிழியற் பணியில் பத்திரிகைகள் ஈடுபட்டன. இப்பணிகள் தேசியப் பாதையிற் பத்திரிகைத்துறை நடைபோட ஆரம்ப கதியினை ஏற்படுத்தின.

குறிப்பாக கிறித்தவர்களுக்கும் அவர்தம் சமயத்துக்கும் வலுவூட்டும் கருவியாகவும், தற்பாதுகாப்புக் கேடயமாகவும் உதயதாரகை விளங்கியதுபோல கத்தோலிக்கப் பத்திரிகையாகிய சத்தியவேத பாதுகாவலனும் (1876) விளங்கியது. இவைபோல இந்து சமயத்தாருக்கு ஆரம்பத்தில் ஒரு பத்திரிகை இருக்கவில்லை. இந்தக் குறையைப் போக்கும் தன்மையினதாக 1889இல் இந்துசாதனம் தோன்றியது. கிறித்து சமயத்திற்கு எதிரான பிரசாரக் கருவியாகவும், இந்து மறுமலர்ச்சி ஏடாகவும், கொள்கை விளக்க ஏடாகவும் இன்றுவரை தொடர்ந்து நடைபெறுகின்றது. இந்துசாதனத்தின் முன்னர் 1880ஆம் ஆண்டில் தோன்றிய உதயபானு நாவலரின் சீடர்கள் உருவாக்கிய சைவப் பிரகாச சமாஜத்தால் வெளியிடப்பட்டது. நீண்ட காலம் இப்பத்திரிகை நிலைத்திருக்கவில்லை.[8] இதுபோலவே

7. வேலாயுதம்பிள்ளை த. பாவலர் துரையப்பாபிள்ளையின் பாரிய பத்திரிகைப் பணிகள், தினகரன் — ஞாயிறு மஞ்சரி ஒக்ரோபர் 29. (1972)

8. Ragunathamuthaliyar V. The Contribution of Saiva-paripalana Sabai to Education. An Essay submitted in part fulfilmemt for the Diploma in Education, University of Ceylon, Peradeniya 1972, p. 11.



1848இல் வெளியான இலங்கை நேசனும் தனது ஆயுளை அற்பமாகவே முடித்துக் கொண்டது. இதுபோல முஸ்லிம் நேசன் என்ற பத்திரிகையும் சிலகாலம் நடைபெற்று வந்தது. அறிஞர் சித்திலெப்பையால் வெளியிடப்பட்ட இப்பத்திரிகை முஸ்லிம் மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. ஆக்க இலக்கிய சேவையும் அவர்களிடையே ஆரம்பமானது. சமய நோக்கும் சமூக நோக்கும் கொண்டனவாகவே இப்பத்திரிகைகள் விளங்கின: இலங்கை நேசனே இந்துக்களால் வெளியிடப்பட்ட முதலாவது தமிழ்ப் பத்திரிகையாகும். இதுபற்றிய விபரங்களை அதிகமாகத் தெரிய முடியவில்லை. 1859ஆம் ஆண்டில் பாலிய நேசன் என்ற பேரில் சிறுவர் பத்திரிகையும் வெளிவந்துள்ளது. ஈழத்தின் ஆரம்பகாலப் பத்திரிகையுலகு பெரிதும் மதப்பிரசார நோக்குடனேயே இயங்கியதன்றித் தேசியத்தை எள்ளளவும் அணுகவில்லை. ஏகாதிபத்திய தாசர்களாக மக்களை மாற்றும் பணிக்கு இவை தூபமிட்டு வந்தன. மக்களை விதேசியப் பற்றுள்ள நிலையில் இயங்கவைத்தன. ஈழநாட்டின் சமயப் போராட்டத்தினது தர்க்கரீதியான வளர்ச்சியின் விளைவாகப் புதிய பத்திரிகையுலகு செயலாற்றியது. சமய இயக்கத்தின் கேடயமாகவும் அது விளங்கியது.

எமது நாட்டின் 19ஆம் நூற்றாண்டுத் தமிழியற் பணிகளை மதிப்பீடு செய்யும்போது நிச்சயமாகப் பத்திரிகையுலகை மறந்துவிடலாகாது. அந்த நூற்றாண்டில் ஈழத்திலே சுமார் இருபத்தைந்துக்கு மேற்பட்ட பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றுள் இன்றும் தமக்கென உரிய பாரம்பரியத்தோடு இயங்கிவரும் உதயதாரகை, சத்தியவேத பாதுகாவலன், இந்துசாதனம் ஆகிய மூன்றும் சமய நிறுவனங்களின் தற்பாதுகாப்பு நோக்குடன்உருவானவையே. சுருங்கக் கூறின் ஆரம்பகால ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகையுலகு சமயப் பின்னணியை மூலமாகவும், சமூக சீர்திருத்தம், கல்விவளர்ச்சி ஆதியனவற்றை உள்ளடக்கியதாகவும் கொண்டு இயங்கியது எனலாம்.

ஈழத்துத் தமிழ்ப்பத்திரிகைகளின் தோற்ற வளர்ச்சிப் பண்புகள் தென்னிந்தியப் பத்திரிகை வளர்ச்சியோடும் இணைத்து ஆய்வு செய்யப்பட வேண்டியனவாகும். தமிழ் நாட்டுப் பத்திரிகைகளின் போக்கும் சிந்தனைத் தாக்கங்களும் ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகையுலகை ஆரம்ப காலம் முதல் பாதித்துவந்துள்ளமையைச் சுலபமாக அவதானிக்கலாம். தமிழ் நாட்டில் முதன்முதல் வெளிவந்த பத்திரிகை தமிழ்ப் பத்திரிகை (1831) என்ற திங்கள்

இதழாகும். மதருஸ் துண்டுப் பிரசுர சபையால் சென்னையில் இப்பத்திரிகை அச்சிடப்பட்டது.[9] இது வெளியான பத்து ஆண்டுகளின்பின் ஈழத்தில் உதயதாரகை தோன்றியது. பொதுவாகச் சமயப் பின்னணி நோக்கில் காணப்படும் ஒற்றுமைகளை அவதானித்தல் ஆரம்பகாலப் பண்புகளை விளங்க உதவி செய்கிறது. இந்தியப் பத்திரிகைகள் ஈழத்துப் பத்திரிகைகளைப் பாதித்தமையை இருவகையில் நோக்கவேண்டும். ஆரம்ப ஈழத்துப் பத்திரிகைகள் இந்தியப் பத்திரிகைகளை முன்மாதிரியாகக் கொண்டு இயங்கின என்பதும் இந்தியப் பத்திரிகைகளையும் எமது நாட்டு வாசகர்கள் நன்கு படித்துவந்தனர் என்பதும கவனிக்கப்படவேண்டியவை. இந்த ஆர்வமும் அருட்டுணர்வும் கொண்டு பலர்பத்திரிகை முயற்சிகளைச் செய்து வந்தனர். குறிப்பாக ஈழத்துப் பத்திரிகைகள் எமது நாட்டு விடயத்திலும் பார்க்க அதி முக்கியத்துவம் இந்தியப் பிரச்சினைகளுக்குக் கொடுத்திருப்பது இதை உறுதிப்படுத்துவதாகும்.

ஆரம்பகால பத்திரிகைகள் பல (முற்குறிப்பிட்ட சமயச் சார்பான பத்திரிகைகளைத் தவிர) நீண்டகாலம் நடைபெற்றனவாக இல்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தோன்றிச் சில காலம் நடந்து பின்னர் மறைந்துபோன பத்திரிகைகள் பல. சென்ற நூற்றாண்டில் வெளிவந்த பத்திரிகைகள் பற்றிய முழுத் தகவல்களையும் திட்டவட்டமாகக் கூறமுடியாது. பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம் பற்றி ஆய்வு செய்த மயிலை. சீனி. வேங்கடசாமி நீண்ட பட்டியல் ஒன்றைக் கால ஒழுங்குமுறைக்கேற்பத் தந்துள்ளார். மேலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் உரைநடை வளர்ச்சி பற்றி ஆய்வு செய்த அ. மு. பரமசிவானந்தம் தந்துள்ள சில குறிப்புக்களும், தகவல்களும் பயனுள்ளவை. திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட நாள், கிழமை, திங்கள், இதழ் விளக்க வரிசையும் பல பயனுள்ள செய்திகளையும் பத்திரிகைகளின் அமைப்புப் பற்றிய விபரங்களையும் தந்துள்ளது.[10] இதேவகையில் ஈழத்துப் பத்திரிகைகள் பற்றிய தனியான அட்டவணையொன்று தயாரித்தல் அவசியமாகும். பொதுப் பண்புகளை முழுமையாக மேலெழுந்தவாரியான செய்திகளின் அடிப்படையில் நோக்குவது கடினம். மேலும் காலம், வெளிவந்த ஒழுங்கு, அமைப்பு ஆதியனபற்றி நெறிமுறையாகத் தொகுக்க வேண்டும். முன்னைய இந்திய வெளியீடுகள் யாவும் ஈழத்து முயற்சிகளைப் பற்றிச் சுருக்கமாக (அவசர குறிப்புக்களாக) குறிப்பிட்டுள்ளன.

9. வேங்கடசாமி சீனி. மயிலை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம். சாந்தி நூலகம், சென்னை.(1962) பக். 134.

10. இராமசாமிப்புலவர் சு. அ. நாள், கிழமை, திங்கள் இதழ் விளக்க வரிசை தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி. (1961)



இருபதாம் நூற்றாண்டு ஆரம்பமுதல் ஈழநாட்டிற் தோன்றிய பத்திரிகைகளின் நோக்கங்கள் அவற்றை ஆரம்பித்தோரின் இலட்சியங்கள் யாவும் சமூகத்தைப் பல வழிகளில் நெறிப்படுத்துவனவாக உள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் படிப்படியாக உருவாகிவந்த கல்வி வளர்ச்சி சமுதாயத்திற் பரவலாகச் சிந்தனைப் புரட்சியை ஏற்படுத்தியது. மரபுவழி வந்த கல்விமுறையும் மேல்நாட்டுக் கல்விமுறையும் முட்டிமோத ஆரம்பித்தது. சமூகத்திற் பல்வேறு மட்டங்களிலும் கல்விவல்ல உயர்ந்தோர் குழாம் (Elites) உருவாகிச் செயற்பட ஆரம்பித்தது.[11] இவர்கள் தமது சிந்தனைப் புரட்சியின் களமாகப் பத்திரிகைகளைக் கொள்ள ஆரம்பித்தனர். நவீன வசதிகள் அற்ற நிலையிலும் தமது கருத்துக்களுக்கு ஒரு வெளிப்பாட்டுச் சாதனத்தைத் தேடவேண்டியதேவை அவர்களுக்கு இருந்தது; பாரத நாட்டில் ஏற்பட்ட அலையான சுதந்திர இயக்கங்களும் ஐரோப்பிய மறுமலர்ச்சி இயக்கத்தின் வேகமும் இவர்கள் மனதைப் படிப்படியாக ஆட்கொண்டது. இதனால் வசதியும் வாய்ப்பும் வாய்த்தோர் பத்திரிகைகளைச் சிந்தனை வெளிப்பாட்டுக்குக் கழுவாயாகக் கொண்டனர்.[12] அச்சியந்திர வசதிகளும், நூலக வசதிகளும், கல்வி மாற்றங்களும் பத்திரிகை உலகப்போக்கில் நிதானமாக இணைத்து மதிப்பீடு செய்யப்படவேண்டியவை எனலாம். குறிப்பாக 1885இல்தோன்றி நீண்ட காலமாக நடைபெற்றுவந்த ச. தம்பிமுத்துப் பிள்ளையின் சன்மார்க்க போதினி சமூக ஒழுக்கங்களை நெறிப்படுத்தும் நோக்கில் நடைபெற்றது.[13] உலகில்

11. கைலாசபதி, க. துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழா மலர் தெல்லிப்பழை. (1972) பக். 37.

12. சிவஞானம் ம. பொ. விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு. இன்ப நிலையம், சென்னை. (1970) பக். 224.

13. இராமசாமிப்புலவர் சு. மு. கு. நூ. பக். 45.

சன்மார்க்கத்தைப் பரப்பி மக்களை நல்ல வழியில் திருப்ப வேண்டும் என்ற கருத்தில் இவ்விதழ் இயங்கியது. 1902இல் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை சுதேசநாட்டியம் என்ற பத்திரிகையினைத் தொடங்கி நடாத்தினர். இப்பத்திரிகை பெருமளவு கண்டனங்களைத் தாங்கி வெளிவந்திருப்பினும் ஈழத்துக் கலை இலக்கிய வரலாற்றில் மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டியதொரு பத்திரிகையாகும்.[14] சுதேசநாட்டியம் போன்ற பத்திகைகளின் தோற்றம் சமய சிந்தனைகளைக் கடந்து சமூக சிந்தனையுடன் இயங்கிய சமுதாயத்தைக் காட்டுவதாகும். படிப்படியாக ஆக்க இலக்கியத்துறை ஆர்வமும், முயற்சிகளும் அரும்பத் தொடங்கின. பத்தொன்பதாம் நூற்றுண்டுச் சமயப் பிரக்ஞையின் வளர்ச்சியையும், தொடர்ச்சியையும் இருபதாம் நூற்றுண்டுப் பத்திரிகைகளிலும் அவதானிக்க முடியும். சமய, சமூக, சமரசநோக்கு வளர்ச்சியின் தடத்தையும் லேசாக அவதானிக்கலாம். சர்வதேசப் பிரச்சினைகள் எமது சமூகத்தைப் பரவலாகக் கவரவும், ஆகர்சிக்கவும் தொடங்கின.

குருசந்திரோதயம் என்ற பத்திரிகை 1908ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் சு. அ. செல்வத்துரை என்பவரால் வெளியிடப்பட்டது. இது கதை, கட்டுரைகள் தாங்கிச் சில காலம் வெளிவந்தது. இதேயாண்டில் சைவசித்தாந்தத்தைப் பரப்பும் நோக்கில் ஞானசித்தி என்ற பத்திரிகையும், யாழ்ப்பாணம் எம். சபாரத்தின ஐயரால் இந்து பாலபோதினி என்ற திங்கள் இதழும் வெளியிடப்பட்டன. இப்பத்திரிகைகள் இந்து சமய சிந்தனைகளைப் பிரதானமாகவும் குறிப்பாக சமுதாய அரசியல் கருத்துக்களையும் தாங்கி வெளிவந்தன.

1910ஆம் ஆண்டில் ஆ. சண்முகரத்தினசர்மா, ஞானப்பிரகாசம் என்ற பத்திரிகையை வெளியிட்டார். இப்பத்திரிகை சைவசமய வளர்ச்சியையும், அறிவு வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டதாயினும் இலக்கியத்திற்குக் கணிசமான இடத்தை அளித்தது.

1919இல் ஆதித் திராவிடன் என்ற பத்திரிகை எஸ். பி. கோபாலசாமி என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. 1921இல் ஆனந்தசாகரம் சி. பதுமநாதஐயர் அவர்களை ஆசிரியராகக்கொண்டு சமூக முன்னேற்றம் கருதி வெளியிடப்பட்டது. இது கதை, கட்டுரை கொண்ட

14. விஜயேந்திரன், ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை. நயினர் பிரசுரம், மாவிட்டபுரம். (1973) பக். 6



பல்சுவைப் பத்திரிகையாக விளங்கியது. இதேநோக்கில் ஈழத்தில் அவ்வப்போது பல பத்திரிகைகள் தோன்றிச் சாதனைகள் புரிந்தன.

குறிப்பாக 1930இல் வீரகேசரி, ஈழகேசரி ஆகிய இதழ்கள் தோன்றின. 1932 முதல் தினகரன் வெளிவருகின்றது. ஈழகேசரிப் பத்திரிகை தேசிய எழுச்சிக் காலத்துடன் உருவாகியது. சேர் பொன். இராமநாதனின் தேசிய சாதனைகளின் வளர்ச்சியின் அருட்டுணர்வே இப்பத்திரிகையின் தோற்றம். ஈழகேசரியை ஆரம்பித்த பொன்னையாவின் பத்திரிகை உலகச் சாதனைகளும், சிந்தனைப் புரட்சிகளும் எமது தேசிய இலக்கிய பாரம்பரியத்தை வளர்க்க வழிவகுத்தன.[15] இலக்கிய விழிப்புணர்ச்சியைப் பரவலாக ஏற்படுத்தி ஆக்க இலக்கியத்தை வளர்த்தது. ஈழகேசரியின் பின்னணியில் உருவாகிய பன்முகப்பட்ட பணிகள் பொன்னையாவிற்குப் புகழ் பூத்த பத்திரிகையாளர் வரிசையில் தனியிடத்தை அளிக்கிறது. பத்திரிகைப் பின்னணியிலே தென்னகத்துச் சக்திக் கோவிந்தனுடன் ஒப்பிடக்கூடிய பண்புகள் வாய்ந்தவர் பொன்னையா. ஈழகேசரி வெளியிட்ட ஆண்டுமடல்கள் கலை, கலாசார, இலக்கியத் தொகுப்புக்களாக உள்ளன.

ஈழகேசரியின் பின்னணியில் தோன்றிய ஆக்க இலக்கிய வேகம் மறுமலர்ச்சி என்ற சிறுசஞ்சிகையைத் தோற்றுவித்தது. இதன் பின்னணியில் காலம் தோறும் தோன்றிய சிறுசஞ்சிகைகள் குறிப்பாக கலைச்செல்வி, விவேகி, வசந்தம், தேனருவி, மல்லிகை, சிரித்திரன், தமிழமுது, அஞ்சலி ஆகிய பலவும் தொகுத்துத் தனியாக ஆய்வு செய்யப்பட வேண்டியன.[16] ஈழகேசரியும், வீரகேசரி, தினகரனும், பின்னர் சுதந்திரனும் தமிழரிடையே வாசிப்புப் பயிற்சியைப் பரவலாக ஏற்படுத்திய பத்திரிகைகளாகும். வீரகேசரி, தினகரன் தினசரிப் பத்திரிகைகளாகத் தோன்றி வளர்ந்தவை. 1930இல் ஆரம்பமான வீரகேசரியின் முதலாவது ஆசிரியரான பெரி. சுப்பிரமணியன் செட்டியார். தினகரன் வை. இராமநாதபிள்ளை ஆகியோர் பணிகள் தொகுத்து மதிப்பிடவேண்டியவை. தினகரன் ரி. எஸ். தங்கையா காலத்தில் சிறந்த செய்திப் பத்திரிகையாக மாறியது. பின்னர் ஏறபட்ட வளர்ச்சி மாற்றங்களும் இலக்கியப் பணிகளும் தமிழ்ப்

15. கைலாசபதி க. மறுமலர்ச்சிக்காலம் இலக்கியச் சிறப்பிதழ் கலைப்பெருமன்ற வெளியீடு, தெல்லிப்பழை. (1973) பக். 25.

16. மே. கு. நூ. பக். 26.

பத்திரிகைத் துறையின் சாதனைகளை அறிவுறுத்துபவை.

சுதந்திரன் பத்திரிகை 1947இல் கோ. நடேசையரை ஆசிரியராகக் கொண்டு தினசரி இதழாக நடைபெற்றது. பின்னர் வார இதழாகி நடைபெறுகிறது. அண்மைக் காலத்தில் ஈழநாடு (1959) செய்தி, தினபதி போன்ற பத்திரிகைகள் தோன்றிப் பரந்த வாசகர் கூட்டத்தைப் பெற்றுள்ளன.

பட்டியல் ரீதியாகத் தொகுத்து நோக்காது சில பொதுப் போக்குகளையும், குறிப்புக்களையும் பண்பாய்வு அடிப்படையில் வகைப்படுத்திக் கூறலாம்.

எமது நாட்டுப் பத்திரிகையுலகு ஏறக்குறைய 175 ஆண்டுச் சாதனைகளைக் கொண்டது. இவற்றை அவ்வவற்றின் பண்புக்கு ஏற்பவும், அமைப்புக்கு ஏற்பவும் பகுத்து ஆய்வு செய்யும் முயற்சிகள் இற்றை வரை நடைபெறவில்லை. நவீன விஞ்ஞானக் கோட்பாடுகளுக்கிணங்க வளர்ந்துவரும் பத்திரிகைத்துறைக் கல்வியும் எமது நாட்டில் இன்னும் நெறிமுறையாக ஏற்படவில்லை. இங்கு தோன்றிய செய்தி இதழ்களை நாளிதழ்கள் (News Papers), பருவ இதழ்கள் என்ற பிரிவுக்குள் வகுத்து சாதனைகளையும், போக்குகளையும் நெறிமுறையாக மதிப்பீடு செய்யவேண்டும். பிரதான பத்திரிகை ஆசிரியர்களின் காலங்களையும், போக்குகளையும் அவர்கள் பத்திரிகைத்துறையிற் செலுத்திய ஆளுமையையும் (Personality study of Editors) விரிவாக நோக்கவேண்டும்.

பத்திரிகைத்துறை ஏற்படுத்தியுள்ள இலக்கியத் தாக்கங்களும், சிந்தனைத் தாக்கங்களும், இலக்கிய மதிப்பீடுகளின்போது ஓரளவு உணரப்பட்டும், உணர்த்தப்பட்டும் உள்ளன. மேலும் இவற்றைச் சமுதாய பொருளாதார அரசியல் ஏற்ற இறக்கங்களுக்கேற்ப மறு மதிப்பீடு செய்யவேண்டும்; இன்றைய தமிழ் வளர்ச்சிப் போக்கிற் "பத்திரிகைத் தமிழ்" தனியாக ஆய்வு செய்யப்படவேண்டும். இலக்கியப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் வேரூன்றிய நிலையிலே நிதானமான பணியைத் தொடர்பாக எமது நாட்டில் மேற்கொள்ளவில்லை; காலந்தோறும் தோன்றி மறையும் பிரிவாகவே சிறு சஞ்சிகைகள் (Little Magazines) விளங்குகின்றன. இவற்றின் வளர்ச்சியையும் — தோல்விக்கான காரணங்களையும் விரிவாக ஆராயவேண்டும்.[17]

17. மே. கு. நூ. பக். 24.



நவீன அச்சுக்கலை வளர்ச்சியின் தாக்கங்கள் எமது பத்திரிகைத்துறையில் பரவலான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. பத்திரிகை அமைப்புப்பற்றிய தொழில் நுட்பங்களையும் மக்களைத் தம்பால் ஈர்க்கும் தன்மைகளையும் மாறிவந்த நிலைகளையும் தொகுத்துக்காணவேண்டும். மேலும் யந்திரசாதன வசதியின்மையும், பத்திரிகைத் தட்டுப்பாடுகளும் குறிப்பிடவேண்டிய தொன்றாகும்.

செய்தி இதழ்கள் பரவலாக உணர்ச்சியூட்டும் பாங்கினதாக (Sensationalism) அமைந்துவருகிறது.[18]

எமது பத்திரிகை உலகைச் சார்ந்தோர் நெறிமுறையான பத்திரிகைத்துறைப் பயிற்சி அற்றவராக உள்ளனர். விஞ்ஞானக்கோட்பாட்டுக்கு அமைந்த இக்கலையைப் பல்கலைக்கழக மட்டத்திற் பயிற்றி நிதானமான பத்திரிகை உலகை எமது நாடு அடைய வேண்டும்.

எமது பத்திரிகை உலகின் பரிணாம வளர்ச்சிப் போக்கை மதிபபீடு செய்வது எதிர்காலத்தை நெறிப்படுத்த உதவும். பத்திரிகைகள் எமது சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள பரவலான தாக்கத்தைச் சமூக பொருளாதார அரசியற் போக்குடன் இணைத்து அவதானிக்க வேண்டும். இந்திய நாட்டுப் பத்திரிகைகள் பரவலாக ஏகாதிபத்திய விடுதலைப் போராட்டத்தின் ஏற்ற இறக்கங்களுக்கேற்ப இயைந்து வளர்ந்ததுபோன்ற சூழ்நிலை ஈழநாட்டில் ஏற்படவில்லை. தமிழ் நாட்டுப் பத்திரிகைகளின் பொதுப்போக்கு ஆரம்ப காலகட்டம் முதல் தேச விடுதலையைத் தாரக மந்திரமாகக் கொண்டு இயங்கியதுபோல ஈழத்திற் சமய எதிர்ப்பு இயக்கமே முக்கியத்துவம் பெற்றது. குறிப்பாக இந்துப் பத்திரிகையைச் சேர்ந்த ஜி. சுப்பிரமணிய ஐயர் (1882) முதலாக பத்திரிகைத்துறை தமிழ் நாட்டில் வேகமாக வளர்ச்சியுற்றது. இதுபோன்ற வேகமான வளர்ச்சி நிலையை ஈழத்திற் காணமுடியாது. பாரதநாட்டில் 19ஆம் நூற்றாண்டின் பத்திரிகைத்துறைப் போக்குப்பற்றி இரா. நடராசன் பின்வருமாறு கூறுவர்:

> "அந்நியர் ஆட்சியில் உழன்று விடுதலைக்குத் துடித்துக் கொண்டிருந்த ஒரு சமுதாயத்தின் உள்ளக் கிடக்கையை, மனக் கொந்தளிப்பைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ்ச்செய்தி இதழ்கள் விளங்கின. அவை எப்படித் தோன்றினும், யாரால் தொடங்கப்பெறினும் அவை அக்கால மக்களின்

18. நடராசன் இரா. உலகத் தமிழ் மாநாடு விழா மலர் சென்னை. (1968) பக். வ. 40.

உள்ளத்தைத் தொடுவனவாய் உறங்கிக்கிடந்த நாட்டுணர்வைத் தட்டி எழுப்புவனவாய் அவ்வுணர்ச்சிகளின் வடிகாலாய் விளங்கின.''[19]

ஈழநாட்டில் ஆரம்பகாலப் பத்திரிகையுலகு சமயத்தை உயிர் நாடியாகக் கொண்டதாகவும் அதேநேரம் சமூக சீர்திருத்தத்தையும், கலை, இலக்கிய வளர்ச்சியையும் ஏற்படுத்தியது. எமது நாட்டில் ஆரம்பகாலத்தில் அரசியல் இயக்கம் பொதுமக்கள் இயக்கமாக அமையாமையே இதன் காரணமாகும். பாரத நாட்டில் உருவாகி வளர்ந்த தேசிய உணர்வு ஈழத்தில் மந்தகதியில் வளர்ந்து வருவதும் குறிப்பிடவேண்டிய தொன்றாகும். ஏறக்குறைய 1930ஆம் ஆண்டின் முன்னர் ஈழத்திலே தோன்றிய பத்திரிகையுலகு பெருமளவு சமயத்துடன் இயங்கியது. எமது நாட்டுப் பத்திரிகைகளும் இந்திய விடுதலைக்குப் போராடியதுபோல ஈழநாட்டின் விடுதலையைப்பற்றிச் சிந்தித்ததாகவும் தெரியவில்லை. சமயப் பத்திரிகைகளைத் தவிர்த்து 1930வரையில் தோன்றிய ''ஈழகேசரி'' போன்றவற்றின் 'உள்ளடக்கம்' இந்த உண்மையைக் காட்டுவதாகும். தேசியவாதம், வகுப்புவாதம் ஆதியனவற்றின் படிமுறையான வளர்ச்சியையும் இப்பத்திரிகை வரலாற்றின் மூலம் காணலாம். காலப்போக்கில் பேராசிரியர் சி. அரசரத்தினம் கூறுவதுபோல 'வகுப்புவாத தேசியவாதம்மெள்ளமெள்ள உருவாகியது'[19அ]. இதற்குப் பத்திரிகைகளும் ஒருவகையிற் காலாக விளங்கின.

1930ஆம் ஆண்டில் அலையாக ஏற்பட்ட பொதுமக்கள் யுக சிந்தனையுடனேதான் ஈழத் தமிழ்ப் பத்திரிகை உலகு நவீன பத்திரிகை உலகின் பண்புகளையும் சமூகப் பிரக்ஞையையும் தாங்கி வெளிவர ஆரம்பித்தது. எமது பத்திரிகை உலகு படிப்படியாகப் பத்திரிகைத் திறனுடன் (Journalistic talents) வளர முயன்றது இக்கால முதலெனலாம். ஜனரஞ்சகமும், வியாபார நோக்கமும் பெருகின. பத்திரிகைத் தொழிலில் பரந்த கவனம் ஏற்பட்டது. இதனால் கவர்ச்சிகரமான பொதுமக்கள் அம்சங்கள் (Features of mass scale Jour-

19. மே. கு. நூ. பக். வ. 37.

19அ. Arasaratnam S. *Nationalism, Communalism and Unity in Ceylon. India and Ceylon Unity and Diversity* (Ed. Philip Mason) Institute of Race Relations publication. Oxford University Press London (1967) p. 276.



nalism) கவனிக்கப்பட்டன. இதே காலத்தில் மேலை நாட்டுப் பத்திரிகைத்துறையின் விளைவுகளும் (Impact of Western Journalism) எமது பத்திரிகை உலகிற் பரவலான தாக்கத்தை ஏற்படுத்தியது.[20] சுருங்கக் கூறின் பத்திரிகைத்துறை செல்வாக்கான ஒரு தொழிலாகவும், ஜனநாயக சாதனமாகவும் காலப்போக்கில் அமையத் தொடங்கியது. அரசியற் போக்கைத் திசை திருப்பும் ஆயுதமாகவும் மாற ஆரம்பித்தது.

ஈழநாட்டுப் பத்திரிகைகளைப் பொதுவாக நோக்கும்போது சாலை. இளந்திரையன் திரு. வி. க. வின் பத்திரிகைப் பணியை மதிப்பிடும்போது கூறியவற்றை மனங் கொள்வது பொருத்தமாகும்.

> ''நாளிதழ் அல்லது வார இதழ் ஒரே ஒருவரால் உருவாகி வெளிவருவதில்லை; பல நிலையினரும் இணைந்த ஆசிரியர் குழுவின் கூட்டுப் படைப்பே பத்திரிகை. அவர்களிடையே நல்லுறவு இல்லாவிட்டால் பத்திரிகை வெற்றிபெற முடியாது. இந்த நல்லுறவைப் பணமோ, அதிகாரமோ ஏற்படுத்த முடியாது. இப்பொழுது பார்க்கிறோமே நிறையச் சம்பளம் கொடுக்கும் பத்திரிகைக்குள்ளே ஆசிரியர் — துணையாசிரியர் சண்டைகள் கிளம்பிச் சந்திக்கே வந்துவிடுகின்றன. ஒருவரை ஒருவர் திட்டிக் கொள்வதற்காகவே அவர்கள் புதிய பத்திரிகைகளை ஆரம்பித்து விடுகின்றார்கள். ஆசிரியர் குழுவில் இத்தகைய 'ஒட்டா உறவு' இருந்தால் எல்லோரும் கூலிக்கு மாரடிப்பார்கள். அவர்கள் என்றைக்குமே பத்திரிகையின் இலட்சியத்தை மனதிற் கொண்டு செயலாற்ற மாட்டார்கள். அதன் விளைவாகப் பத்திரிகையின் தரமே தளர்ந்து போகும். இப்படித் தளர்ந்து போன இதழ்களைத்தான் இன்று தமிழில் நிறையக் கண்டு வருகிறோம்''.[21]

ஈழநாட்டுத் தமிழ்ப் பத்திரிகையுலகு மேற்குறிப்பிட்ட சிக்கலுக்கு விதிவிலக்கானதல்ல. இவ்வாறான தன்மை நிதானமான வளர்ச்சிக்குக் குந்தகமாக அமைகின்றது. வெறும்போலி வியாபார நோக்கை மட்டும் இலக்காகக் கொண்டு செயலாற்றுவது தேக்கத்தையே ஏற்படுத்தும்.

20. பார்த்தசாரதி நா. புதிய பார்வை நவபாரதி பிரசுரம், கோயம்புத்தூர். (1969) பக். 10.

21. இளந்திரையன் சாலை. புதுத்தமிழ் முன்னோடிகள். தமிழ்ப் புத்தகாலயம், சென்னை. (1969) பக். 148.

எமது நாட்டின் தேசிய இலக்கியப் போக்கை நெறிப்படுத்தும் பணியிலும் ஆக்க இலக்கியத்தை வளர்க்கும் பணியிலும் பத்திரிகைகளின் பணி முக்கியமாகும்.[22] குறிப்பாக 1930ஆம் ஆண்டில் தோன்றிய ஈழகேசரி என்ற தேசிய வார வெளியீடு ஆரம்பத்தில் காந்தியப் பின்னணியில் அமைந்த அரசியல் ஒளியோடு தோன்றிப் பின்னர் படிப்படியாக இலக்கியக் களம் சமைத்துச் சமூகப் பிரக்ஞையுடன் ஆக்க இலக்கியத்தை வளர்த்தது. இதே போல தினகரன், சுதந்திரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளும் காலந்தோறும் களம் சமைத்து இலக்கியப் போக்கை நெறிப்படுத்தும் மீகாமன்களாக விளங்கின; மேற்குறிப்பிட்ட பத்திரிகைகளைப்போலத் தொடர்பாகச் சிறுசஞ்சிகைகள் பணிபுரியாததும் வளர்ச்சி பெறுததும் குறைபாடாகும். அவ்வப்போது இடையிடையே மின்னி மறையும் நெறியிலே சாதனைகளைப் புரிந்த பத்திரிகைகள் ஒழுங்கு நெறியற்ற குறைப் பிரசவங்களாகவே அமைந்தன.

ஈழநாட்டிலே தமிழ்ப் பத்திரிகைகளின் தோற்ற வளர்ச்சிபற்றிப் பொதுவான பண்புகளைச் சுருக்கமாக இக்கட்டுரையில் வகைப்படுத்தியுள்ளேன். எதிர்காலத்திலே வளர்முக நாடுகளில் ஒன்றாகிய ஈழத்தின் பத்திரிகைத் துறை—நெறிமுறையான பல்கலைக்கழகப் பயிற்சி சார்ந்த பின்னணியிலே தொழில்நுட்ப நுணுக்கங்களுடன் இயங்கும் போக்கு வளரவேண்டும். கடந்த காலப் பத்திரிகைத்துறை வளர்ச்சியின் போக்கு இதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

22. சிவநேசச்செல்வன் ஆ. பூம்பொழில் தமிழ் இலக்கிய மன்றம், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன வெளியீடு (1973) பக். 71. [ஈழத்துப் புனைகதைத் துறையில் வெளியீட்டுச் சாதனங்களின் தாக்கம்பற்றிச் சுருக்கமாக ஆராயப்பட்டுள்ளது.]

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்